# Abstinence from Toddly as Insisted in Tamil Jain Literature

**Dr. J. Neelakesi**
*Department of Jainology, University of Madras*
*Raja Annamalaipuram, Chennai*

**Abstract**
*This paper elaborates on how various Jain didactic literature, epics, puranas insist on the abstinence from toddy and other types of liquor including the narcotics. Also, it highlights the need for the enlighting the younger generation by revisiting these texts.*
*Aim of the study: To educate people about toddy.*
*Approach to Research: A qualitative approach*

***Keywords:*** *Jain Diet, Ethical Code for the Householders, The Vows, the Rules, The Addictions & Vices, The Abstinence from Toddy, The Didactic Literature, Epics, Minor Literature, The Social Condition then and now.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981657

**References**

1. Five different authors, Aimperungkappiyangal, Varthamanan Pathippagam
2. Five different authors, Ainchiru Kappiyangal, Varthamanan Pathippagam
3. Various Authors, Pathinen Keezhkkanakku, Varthamanan Pathippagam
4. Unknown author, Arungalacheppu - Sri Sruthakevali Bhadrabahu Seva Dalam
5. Gunadharar, Dasadharmam - Tamil Virtual Academy
6. Vamana munivar, Merumandara Puranam - Jain Youth Forum
7. Udisi Thevar, Thirukkalambakam, typed copy

# தமிழ்ச் சமண இலக்கியங்கள் வலியுறுத்தும் கள்ளுண்ணாமை

*முனைவர் ஜெ. நீலகேசி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமணவியல்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

போதை தரும் கள், மது வகைகள் ஆகியவற்றைக் குடிக்கும் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளைக் கருத்தில் கொண்டே சமணம் கள்ளுண்ணாமையை வெகுவாக வலியுறுத்துகிறது. "குடி குடியைக் கெடுக்கும்' என்னும் பழமொழி சமூகத்தில் பன்னெடுங்காலமாக நிறுவப் பெற்றுள்ள உண்மையை எடுத்துரைக்கின்றது.

உணவு ஒரு மனிதனின் உடல் மற்றும் மன நலன்களின் சமநிலைக்கு ஒரு முக்கிய காரணமாகிறது. சமண உணவு பழக்கங்களின் பட்டியலிலும், தசதர்மத்திலும், கள்ளுண்ணாமை இடம் பெறுகின்றது. சமணம் கண்டிக்கும் 'வியசனங்கள்' என்றழைக்கப் பெறும் விலக்கப் பெற்ற போதைகளின் பட்டியலிலும் கள் உள்ளது.

**சமண உணவு முறை**

- தாவர உணவு
- இரவுண்ணாமை
- வடித்து கொதிக்க வைக்கப் பெற்ற நீரை உபயோகித்தல்

நிலத்தின் கீழ் விளையும் கிழங்குகளைத் தவிர்த்தல்

- தேனுண்ணாமை
- கள்ளுண்ணாமை
- உதும்பர பழங்களைத் தவிர்த்தல் (அத்தி, ஆல், அரளி, கல்லத்தி போன்றவை)
- உபவாசங்களைக் கடைப்பிடித்தல்

சமண இல்லறத்தாரின் மூலகுணங்கள்

- கொல்லாமை
- பொய்யாமை
- களவாமை
- பிறன் மனை விரும்பாமை
- மிகுபொருள் விரும்பாமை
- புலால் உண்ணாமை
- கள்ளுண்ணாமை
- தேனுண்ணாமை

**இல்லறத்தாரின் நெறிமுறைகளை விளக்கும் நூலான அருங்கலச்செப்பு உரைப்பதாவது**

**"கள்ளொடு தேன்புலைசு உண்ணாமை ஐவதமும்
தெள்ளுங்கால் மூல குணம்'**

**-82, அருங்கலச்செப்பு**

**"மயக்கம் கொலை அஞ்சிக் கள்ளு மதுவும்
துயக்கில் துறக்கப் படும்'**

**-100, அருங்கலச்செப்பு**

அற நூல்களும் சமணக் காப்பியங்களும், புராணங்களும், நெறிமுறைகளை வலியுறுத்துகின்றன.

**"கள்ளார் கள் உண்ணார் கடிவ கடிந்து ஓரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்து உரையார் தள்ளியும்
வாயின் பொய் கூறார் - வடு அறு காட்சியார்
சாயின் பரிவது இலர்**

**-157, நாலடியார்**

**"பிறர்மனை கள் களவு சூது கொலையோடு
அறன் அறிந்தார் இவ் ஐந்தும் நோக்கார்-திறன்
இலர் என்று
எள்ளப் படுவதூஉம் அன்றி, நிரயத்துச்
செல்வுழி உய்த்திடுதலால்'**

**-37, ஆசாரக்கோவை**

***"பெருகிய கொலையும் பொய்யும் களவோடு பிறன்மனைக்கண்***
***தெரிவிலாச் செலவும் சிந்தை பொருள்வயின் திருகு பற்றும்***
***மருவிய மனத்து மீட்சி வதம்இவை ஐந்தோடு ஒன்றி***
***ஒருவின புலைசு தேன்கள் ஒழுகுதல் ஒழுக்கம் என்றான்'***

***-236, யசோதர காவியம்***

***"பெரியகொலை பொய்களவு பிறர்மனையில் ஒருவல்***
***பொருள்வரைதல் மத்தமது புலைசுஉணலின் நீங்கல்***
***பெரியதிசை தண்டம்இரு போகம்வரைந் தாடல்***
***மரீஇயசிக்கை நான்கும்இவை மனையறத்தார் சீலம்'***

***-356, மேருமந்தர புராணம்***

### ஏழு வியசனங்கள்

ஒரு மனிதனுக்கு போதையூட்டி, கிளர்ச்சி ஏற்படுத்தி, மதி மயங்கச் செய்து, அறிவை மழுங்கடித்து, அடிமைப் படுத்தும் தீய பழக்கங்கள்'வியசனங்கள்' என்று வடமொழியில் வழங்கப் பெறுகின்றன. ஆக, "வியசனங்கள்' என்பன தீய பழக்கங்களையும், விலக்கி வைக்க வேண்டிய பழக்கங்களையும், சுட்டுவனவாகும்.

### ஏழு வியசனங்கள்

1. வேட்டை
2. களவு
3. புலால் உண்ணல்
4. சூதாட்டம்
5. கள்ளுண்ணல்
6. விலைமாதர் தொடர்பு
7. பிறன்மனை நாடல்

### தசதர்மம்

சமண சமயத்தில் இல்லறத்தார்களுக்குரிய அறநெறிகளைத் தொகுத்து விளக்குவதாகும். இல்லறத்தார்களுக்குரிய ஐந்து அணுவிரதங்களோடு, புலால், தேன், கள், ஆகியவற்றோடு இரவுண்ணுதலையும் தவிர்த்து துறந்தாரைப் பணிந்து போற்றுவதோடு கூடிய பத்து வித அறங்களைக் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. அவ்வாறு கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகளையும், கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் தீமைகளையும், விளக்கி அறநெறிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும், உணர்த்துகிறது. இந்நூல் இருபத்து ஆறு கலிவிருத்தங்களைக் கொண்டது.

### தசதர்மம்

1. கொல்லாமை
2. பொய்யாமை
3. கள்ளாமை
4. காமத்தை ஒல்லாமை
5. ஒண்பொருளை வரைதல்
6. புலால் உண்ணாமை
7. தேன் உண்ணாமை
8. கள்ளுண்ணாமை
9. இருளில் உண்ணாமை
10. நல்லாரைப் பணிதல்

**"கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தை**
**ஒல்லாமை ஒண்பொருளை வரைதலோடு இவைபிறவும்**
**பொல்லாத புலசுதேன்கள் இருள்உண்ணா நிலைமையொடு**
**நல்லாரைப் பணிவதுவும் நாமுறையே பயன்உரைப்பாம்"**

***- 4, தசதர்மம்***

**"ஒள்ளியார் ஓதுவதும் ஓதினது மறவாமல்**
**தெள்ளியறம் ஒள்ளியார் கேட்பதுவும் கேட்டவற்றை உரைப்பதுவும்**
**கொள்ளற்பாடு உடைமையும் கூறாச் சொல் இன்மையும்**
**கள்ளுண்ணா நல்விரதம் காத்ததன் பயனாகும்"**

***-19, தசதர்மம்***

**"உள்ளுணராதுஒழுகுதல்உறத்தூய்மைஇன்மையும்**
**எள்ளற்பாடு இழிதொழில்செய்து இழிகுலத்தில் தோன்றுதலும்**

*கொள்ளற்பாடு இன்மையும் கூறாச் சொல் கூறுதலும் கள்ளுண்டு களித்தாடிக் கழிந்ததன் பயனாகும்"*

***-20, தசதர்மம்***

சிற்றிலக்கியங்கள் உரைப்பதுவும் அக்கருத்தேயாகும்.

*"கரவுஇரவுணல் கொலை கள்தேன் புலசு மற்றும்*
*விரவம் பிறர்மனை பொய் வேட்கை - பரவும்*
*உறுவர் பழித்தல் என இவையொரு பத்தும்*
*இறுகலை என்றான் இறை'*

***-17, திரு இரட்டைமணிமாலை***

*"மடுக்கும் நறவு தெளி இருள் உண மடவார் விழைவு*
*கெடுக்கும் கொலை பொய் களவு புலால் பாருள்கேளிர் சுற்றும்*
*விடுக்கும்முனிவரை வைதல் ஒல்லார் முத்த வெண்குடைக்கீழ்*
*அடுக்கும் பணக்குடையார் அடி நீழல் அடைந்தவரே'*

***-48, திருமேற்றிசை அந்தாதி***

*"விரையார் மலர்மிசை வருவார் திருவறம்*
*விழைவார், கொலையினை விழையார்; பொய்*
*உரையார்; களவினை ஒழுகார்; பிறர்மனை*
*உவவார்; மிகுபொருள் உவவார்; வெஞ்*
*சுரையால் உணர்வினை அழியார்; அழிதசை*
*துவ்வார்; விடமென வெவ்வாறும்*
*புரையார்; நறவினை நுகரார்; இரவுணல்*
*புகழார்; குரவரை இகழாரே!'*

***-67, திருக்கலம்பகம்***

*"பிறர்வருந்தும் பொய் கொலைக்களவு நண்பெண்கள்நசை பொருள் தினம்தின்ற பிரசம்*
*நறவுஅருங்கங்குல் உணல் அறவ நண்பின்றிடைவ நவையுஞ் சென்றவனிடம்*
*குறவரும்சிங்க முதல் கொடுவிலங்கும் பலகொலை தவிர்ந்தங்கண்மரபில்*
*சிறகர்வண்டும்பிரசம் நுகரவஞ்சும் பெரிய திருநறுங்கொண்டைமலையே'*

***- 4, திருநறுங்கொண்டை மலைப்பதிகம்***

உலகப் பொதுமறையான திருக்குறள் கள்ளுண்ணாமைக்கு ஒரு தனி அதிகாரம் வகுத்துள்ளது. பிற அற நூல்களும் அக்கருத்தை வழிமொழிகின்றன.

*"உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்*
*கட்காதல் கொண்டொழுகு வார்'*

***-921, திருக்குறள்***

*"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்'*

***-922, திருக்குறள்***

*"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி'*

***-923, திருக்குறள்***

*"நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்*
*பேணாப் பெருங்குற்றத் தார்க்கு'*

***-924, திருக்குறள்***

*"கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து*
*மெய்யறி யாமை கொளல்'*

***-925, திருக்குறள்***

*"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்*
*நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'*

***-926, திருக்குறள்***

*"அழிவந்த உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்*
*கள்ளொற்றிக் கண்சாய் பவர்'*

***-927, திருக்குறள்***

*"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து*
*ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்'*

***-928, திருக்குறள்***

*"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்*
*குளித்தானைத் தீத்துரீஇ அற்று'*

***-929, திருக்குறள்***

*"கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'*
***-930,** திருக்குறள்*

*கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும், பைங் கூழ்*
*விளைவின் கண் போற்றான் உழவும், இளையனாய்க்*
*கள் உண்டு வாழ்வான் குடிமையும்-இம் மூன்றும்*
*உள்ளன போலக் கெடும்*
***-59,** திரிகடுகம்*

*கதம் நன்று சான்றாண்மை தீது கழிய*
*மதம் நன்று மாண்பு இலார் முன்னர் விதம் நன்றால்*
*கோய் வாயின் கீழ் உயிர்க்கு ஈதுற்றக் குரைத்து எழுந்த*
*நாய் வாயுள் நல்ல தசை*
***-17,** சிறுபஞ்சமூலம்*

*கள்ளுண்டல் காணில் கணவன் பிரிந்துஉறைதல்*
*வெள்குஇல ளாய்ப்பிறர் இல்சேறல் - உள்ளிப்*
*பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமைத்*
*திறம்அதுதீப் பெண்ணின் தொழில்*
***-25,** சிறுபஞ்சமூலம்*
*கள் உண்பான் கூறும் கருமப் பொருள் இன்னா;*
*முள்ளுடைக் காட்டில் நடத்தல் நனி இன்னா;*
*வெள்ளம் படு மாக் கொலை இன்னா; ஆங்கு இன்னா,*
*கள்ள மனத்தார் தொடர்பு*
***-33,** இன்னா நாற்பது*

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணியில் இக்கருத்து விரவி வருவதைக் காணலாம்.

*"கொடி முதிர் கிழங்கு தீம்தேன் கொழுந் தடி நறவொடு ஏந்திப்*
*பிடி முதிர் முலையினாள் தன் தழைத் துகில் பெண்ணினோடும்*
*தொடு மரைத் தோலன் வில்லன் மரவுரி உடையன் தோன்ற*
*வடி நுனை வேலினான் கண்டு எம்மலை உறைவது என்றான்'*
***-1231,** பதுமையார் இலம்பகம், சீவகசிந்தாமணி*

*"ஊழின் நீர் உண்பது என் என்று உரைத்தலும் உவந்து நோக்கி*
*மோழலம் பன்றியோடு முளவுமாக் காதி அட்ட*
*போழ் நிணப் புழுக்கல் தேன் நெய் பொழிந்து உகப் பெய்து மாந்தித்*
*தோழ யாம் பெரிதும் உண்டும் தொண்டிக்கள் இதனை என்றான்"*
***-1233,** பதுமையார் இலம்பகம், சீவகசிந்தாமணி*

*"ஊனொடு தேனும் கள்ளும் உண்டு உயிர் கொன்ற பாவத்து*
*ஈனராய் பிறந்தது இங்ஙன் இனி இவை ஒழிமின் என்னக்*
*கானில் வாழ் குறவன் சொல்லும் கள்ளொடு ஊன்தேன் கை விட்டால்*
*ஏனை எம் உடம்பு வாட்டல் எவன் பிழைத்தும் கொல் என்றான்'*
***-1234,** பதுமையார் இலம்பகம், சீவகசிந்தாமணி*

*"என்றலும் தேனும் ஊனும் பிழியலும் இறுக நீக்கிச்*
*சென்று அடி தொழுது செல்கு என் தேம் பெய் நீள் குன்றம் என்று*
*குன்று உறை குறவன் போகக் கூர் எரி வளைக்கப் பட்ட*
*பஞ்சவர் போல நின்ற பகட்டு இனப் பரிவு தீர்த்தான்"*
***-1237,** பதுமையார் இலம்பகம், சீவகசிந்தாமணி*

*"மாலைப் பந்தும் மாலையும் ஏந்தி மது வார் பூஞ்*
*சோலை மஞ்ஞைச் சூழ் வளையார் தோள் விளையாடி*
*ஞாலம் காக்கும் மன்னவர் ஆவார் நறவு உண்ணாச்*

*சீலம் காக்கும் சிறு உபகாரம் உடையாரே!"*

***-2928, முத்தி இலம்பகம், சீவகசிந்தாமணி***

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான யசோதர காவியத்திலும், மேருமந்தர புராணத்திலும், இக்கருத்து பயின்று வருவது கண்கூடு.

***"தெருளுடை மனத்திற் சென்ற தெளிந்து உணர் வாய செல்வம்***
***பொருள்வயின் இறுக்கம் இன்மை புணர்த் திடும் புலைசு தேன்கள்***
***ஒருவிய பயனும் அஃதே ஒளியினோடு அழகு வென்றி***
***பொருள்மிகு குலனோடு இன்பம் புணர்தலும் ஆகும் மாதோ'***

***- 238, யசோதர காவியம்***

***"ஊனொடு தேனும் கள்ளும் இன்றிநன் றாயு வுண்டி***
***தான்உவந்து எவர்க்கும் ஈதல் தாமைந் தானும் மூன்றாம்***
***ஊன்உணும் கொடுமை யார்க்கும் உடன்பட்டு ஊன்உணார்க்கும்***
***மானமா தவர்க்கும் ஈதல் வரிசையாற் பெருகும் மூன்றும்'***

***-349, மேருமந்தரபுராணம்***

***"ஊனொடு தேனும் கள்ளும் உவந்தவை பிறவும் ஈதல்***
***தானமென்று உரைத்துத் தம்மைக் கொன்றுஉயிர்க்கு ஊனை ஈவார்***
***தானமும் தயாவும் எல்லாம் தாம் கண்டவாறு காண்க***
***ஈனம் என்றாலும் கேளார் இயல்பு வேறுஉலகத்தாரே***

***-353, மேருமந்தர புராணம்***

***"இயல்பினாம் துன்பம் என்றும் ஏழ்நரகத்து நீங்கா மயரிகள் செய்வ வெல்லாம் வந்துவந் துற்று நீங்கும் புயல்உறு தடக்கை வேந்தே புலசுதேன் கள்ளை உண்டார் உயல்உறா வகையில் செம்பை உருக்கிவாய் பெய்கின்றாரே***

***-947, மேருமந்தர புராணம்***

***கொலையைக் கோபித்துச் செய்யாக் கொடையினை இடைவிலக்கா***
***இலைஎனின்உவந்து நன்றுஎன்று ஈந்துழிக் காய்ந்து நெஞ்சில்***
***புலைசுதேன் கள்ளு மேவிப் பிறன்செல்வம் பொறாது வவ்வ***
***வலைசெய்ய அந்தராயம் ஐந்தும் வந்தடையும் என்றான்***

***-1348, மேருமந்தர புராணம்***

### சமுதாய நிலை அன்றும் இன்றும்

காலங்காலமாக இவ்வாறு இலக்கியங்களில் பொன்னான வரிகளில் அறிவுறுத்தப் பெற்றாலும், போதைக்கு அடிமையாதல் இச்சமூகத்தில் பன்மடங்கு பெருகியுள்ளது. இதனால் குற்ற விகிதங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் அதிர்ச்சிக் குள்ளாக்குகின்றன. இந்த பாரத நாட்டினின் முழுப்பரப்பிலும் மதுவிலக்கு நடைமுறையில் இருந்த போது இத்தகைய நிலை ஏற்பட்டதில்லை.

மது போதை நீக்க மையங்கள் அதிக அளவில் இயங்குகின்றன. சமூக சேவகி திருமதி சாந்தி ரங்கநாதன் அவர்கள் TTK மருத்துவ ஆய்வு மையம் ஒன்றை அமைத்து, மதுப்பழக்கத்திற்கு அடிமையானவரை மீட்கும் பணியில் சிறப்பாகச் செயல் பட்டதற்காக 1992 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்றார். போதைக்கு அடிமையாகி நிம்மதியும், அமைதியும், கூடிய வாழ்வைத் தொலைத்தவர்களின் உண்மைச் சம்பவங்கள் புதினங்களாகவும் திரைப்படங்களாகவும் உருவெடுத்து மற்றவர்களுக்குப் பாடமாக விளங்குகின்றன. சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார் எழுதிய 'திக்கற்ற பார்வதி' என்ற புதினம் பின்னர் அதே பெயரில் திரைப்படமாகவும் வெளியிடப்பெற்றது. பிரபல எழுத்தாளர் சிவசங்கரி எழுதிய 'ஒரு மனிதனின் கதை' என்ற புதினம், 'தியாகு' என்ற பெயரில் திரைப்படமாக்கப் பெற்றது.

வெகு எந்த மாநிலத்தில் இல்லாத மதுவிலக்கு குஜராத்தில் மட்டுமே அமலில் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டிலோ பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், அருகிலேயே அரசின் மதுக்

*கடைகள் அமைந்துள்ளது வேதனை தருகின்றது. வீட்டிலேயே மது அருந்த வசதிகளை மக்கள் செய்து கொள்கின்றனர். திருமணத்திற்கு மது அருந்தாத வாலிபர் கிடைப்பதே இல்லை; பெண்டிரும் மெள்ள மெள்ள அப்பழக்கத்திற்கு அடிமையாகி வருகின்றனர்.*

*சமுதாயத்தில் அமைதி நிலவ, அரசு மதுவிலக்கைத் திரும்ப அனைத்து மாநிலங்களிலும் அமலுக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது. போதை மற்றும் மதுப் பழக்கத்தின் தீமைகளை பற்றிய விழிப்புணர்வு பள்ளி அளவிலேயே கொண்டு வர வேண்டியது அவசியமாகின்றது.*